சுற்றுநிருபம் : 07/2008

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்
26.06.2008

வட மாகாணத்திலுள்ள சகல
கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்களுக்கும்

கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவையில் அத்தியாயம் 01 பிரிவு 1:8 இன் கீழ் 1:8:10 – 1:8:13 உட்பிரிவுகளை உட்புகுத்துதல்

மேற்போந்த விடயம் சம்பந்தமாக 1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ம் திகதிய வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர் நடைமுறைவிதிக் கோவையின் அத்தியாயம் 01 பிரிவு 1:8 பதில் கடமை நியமனங்கள் என்ற விடயத்தின் கீழ் உட்பிரிவு 1:8:9 இன் தொடர்ச்சியாக 1:8:10 இலிருந்து 1:8:13 வரையிலான உட்பிரிவுகள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

1:8:10 1:8:2 உட்பிரிவில் குறிப்பிட்டவாறு பதிற்கடமை நியமனத்திற்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல் அவசியமானது. ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாத அலுவலர்கள் எக்காரணம் கொண்டும் 1:8:6, 1:8:7, 1:8:8 உட்பிரிவுகளின் படி பதிற்கடமைச் சம்பளம் பெற முடியாது.

1:8:11 கூட்டுறவு ஊழியர்களாக இருந்து 60 வயதிற்கு உட்பட்டோ அல்லது 60 வயதிற்கு மேற்பட்டோ ஓய்வு பெற்றவர்கள் எக்காரணம் கொண்டும் பதில் கடமை நியமனங்களுக்கு நியமித்தல் ஆகாது.

1:8:12 கடமையிலுள்ள ஊழியர்களை ஒழுக்காற்று விசாரணை செய்த பின்னர் ஊழியருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் மட்டுமே பதவி மாற்றம், பதவிக் குறைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கலாம். அவ்வாறு ஒழுக்காற்று விசாரணை செய்யாது வேறு ஊழியர்களை அப்பதவிகளுக்குப் பதில் கடமைகளில் ஈடுபடுத்துதல் ஆகாது. நிறைவேற்றுநர் தரத்திலுள்ள ஊழியர்களைப் பொருத்தமான முறையில் கட்டாய விடுமுறையில் அனுப்பல், வேறு கடமைகள் எதனையும் வழங்காது வேலைக்குச் சமூகமளிக்கச் செய்தல் என்பன தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளக்கூடியனவாகும். இவ்வாறு அவசரமாகச் செய்யப்பட வேண்டிய பதில் கடமை நியமனங்கள் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் நேரடிக் கவனத்தில் செய்யப்படலாம். இதுபற்றிய அவசரச் சூழ்நிலைகளில் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு ஆணைக்குழுவின் தழுவு அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

1:8:13 கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி நியமனம் பெறும் பதில் கடமைகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் பொறுப்பாளிகளான எல்லா ஆட்களிடமிருந்தும் மிகை விதிப்பொன்றின் மூலம் அறவிடுமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அறிவிக்கப்படும்

மேற்படி நடைமுறைகள் 01.06.2008 ம் திகதியில் இருந்து வலுவுடையதாக இருத்தல் வேண்டும்.

2008.06.20 ந் திகதிய ஆணைக்குழு கட்டளைப்படி.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வட மாகாணம்

P. VAGESHAN
Secretary
Co-operative Employees Commission
Northern Province

பிரதி :

01. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், வட மாகாணம்
02. வட மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்.
03. வட மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும்